

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அமைச்சர் மறைந்த ஆலடி அருணா அவர்களின் மகன் ஆலடி எழில்வாணன் எழுதிய "அவர்தான் கலைஞர்' புத்தகத்தை வெளியிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், நூலாசிரியர் ஆலடி எழில்வாணன், எம்ரால்டு பதிப்பகம் உரிமையாளர் முனைவர் ஒளி வண்ணன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் சங்கத் தலைவர் குமார் ஜயந்த், சந்தித்து, ஃபெஞ்சல் புயல் நிவாரண நிதிக்காக இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் ஒரு நாள் ஊதியத் தொகையை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் சங்கத்தின் இணைச் செயலாளர் எஸ்.ஏ.ராமன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (6.12.2024) வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் அரசுத்துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் சார்பில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், ஜெ.எல்.ஈஸ்வரப்பன், அ.செ.வில்வநாதன், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திருமதி வே.இரா. சுப்புலெட்சுமி, (வேலூர்), முனைவர். ஜெ.யு.சந்திரகலா (ராணிப்பேட்டை). சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச்செயலாளர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது!

# ‘திருக்கார்த்திகை தீபத் திருவிழா - 2024’ முன்னேற்பாடுகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

திருவண்ணாமலை, டிச.8-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (06.12.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024 முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் பி.என். ஸ்ரீதர் இந்து சமய அறநிலையத்துறை,கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) மரு. சுகுமார், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மாநில தடகளச் சங்கத்துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர், காவல்துறை சார்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர், இந்து சமய அறநிலையத்துறை சார்பாக ஆணையர் ஆகியோர் விரிவாக அமைச்சர் பெருமக்களிடம் எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

திருக்கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து துணை முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் உள்பட இதுவரை 3 ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு உள்ளது.

5ம் திருவிழாவில் இருந்து அதிகமான ஆன்மிக பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகை தருவார்கள். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகளவில் கூட்டம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு திருக்கார்த்திகை தீபத்திருவிழா சிறப்பாக நடைபெற்றது எனவும், சட்டப்பேரவையில் காவல் துறை மானியக்கோரிக்கையின் போது தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது என்பதற்கு அந்த நிகழ்வே சான்று என பாராட்டுக்களைத் தெரிவித்தார்கள்.

ஆகவே நடப்பாண்டில் வருகின்ற டிசம்பர் 13 அன்று நடைபெறும் கார்த்திகை தீபத் திருவிழாவினை மேலும் சிறப்பாக நடத்துவது குறித்தும், தீபத்திருவிழாவிற்கு வருகை தரும் ஆன்மீக பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிவறை மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முறையாக ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25 தற்காலிக பேருந்து நிறுத்தங்களும்,21 ஆயிரம் கார் நிற்கும் வகையில் 120 கார் பார்க்கிங் இடங்களும்,பக்தர்கள் சிரமமின்றி வந்து செல்லும் வகையில் 8670 வழித்தடங்களில் 3408 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. பக்தர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் தேவையான வழிகாட்டி பலகைகள் அமைக்கப்படவுள்ளது. பெஞ்சல் புயல் கனமழை காரணமாக திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் மண் சரிவு ஏற்பட்டு வேதனைக்குரிய உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது.

ஆகவே திருக்கார்த்திகை தீபத்திருவிழா நாளன்று பக்தர்கள் மலை ஏறுவதற்கு உகந்ததாக உள்ளதா என்பது குறித்து மலையின் தன்மையை ஆய்வு செய்வதற்காக சென்னை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியை முனைவர் பிரேமலதா அவர்களின் தலைமையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் 8 பேர் கொண்ட குழு நாளைய தினம் ஆய்வு மேற்கொண்டு அதற்குரிய அறிக்கையினை உடனடியாக அரசுக்குச் சமர்ப்பித்த உடன் அது குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு மாவட்ட நிர்வாகம் மூலமாக பக்தர்கள் மலை ஏறுவதற்கு அனுமதிக்கப்படுவார்களா என்பது குறித்து தெரிவிக்கப்படும்.

மேலும் தீபத்திருவிழா அன்று திருக்கோயிலுக்குள் 11ää500 நபர்கள் அனுமதிக்கலாம் என பொதுப்பணித்துறை சார்பாக ஆய்வு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே பரணி தீபத்திற்கு 500 அனுமதி அட்டை ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்,மகாதீபத்திற்கு 6000 அனுமதி அட்டை ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்.

ஆகவே நடப்பாண்டில் பாஸ் பிரச்சனை ஏற்படாத வகையில் காவல்துறை, அறநிலையத்துறை, வருவாய் துறையில் கோவில் நுழைவு வாயில் பகுதியில் பணியாற்ற உள்ளனர். பரணி தீபத்திற்கு 6 ஆயிரத்து 600 பேரும்,மகா தீபத்திற்கு 11 ஆயிரத்து 600 பேரும் கோவிலுக்குள் அதிகப்படுவார்கள்.

இந்த ஆண்டு ஆன்லைன் பாஸ் மற்றும் சிறப்பு பாஸ் உள்ளவர்கள் யாரும் வெளியே நிற்க வேண்டிய நிலை இருக்காது. அனுமதி சீட்டு இல்லாதவர்கள் யாரும் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள். போலி பாஸ் எவரேனும் உருவாக்கினால் அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த முறை அனைத்து பாஸ்களில் க்யூ ஆர் கோடு பொருத்தப்பட உள்ளது. 7 கவுண்டர்கள் மூலம் சோதனை செய்த பிறகே அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அதனால் போலி பாஸ் யாரும் உள்ளே வருவதற்கு வாய்ப்பே இல்லை. அனைத்து திருக்கோவில்களும் கார்த்திகை தீப திருநாளில் தெய்வம் வெளிச்சத்தோடு இருக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார்கள்.

இதனால் தீப திருநாளன்று தீப ஒளி வீசும். ஆகவே தீபத்திருவிழா சீரும் சிறப்புமாக எவ்வித இடர்பாடுமின்றி விமர்சியாக நடைபெற அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, இணை ஆணையர், அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருமதி ஜோதி,உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முன் ஆவணப் பதிவு வில்லைகளைப் பயன்படுத்தி – டிச.5 ஒரே நாளில்

# 238 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை!

## பதிவுத் துறை வரலாற்றில் புதிய மைல்கல்! அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்!

சென்னை, டிச.8-

பதிவுத்துறை செய்தி வெளியீடு வருமாறு :

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கி வரும் பதிவுத்துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வகையில் 2024ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1984.02/ கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதனை கடந்த வருடம் நவம்பர் மாதம் அடைந்த வருவாயினை ஒப்பிட்டு



பார்க்கும் போது இந்த நவம்பர் 2024ம் மாதத்தில் கூடுதலாக ரூ.301.87/ கோடி வருவாய் ஈட்டி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும் 05.12.2024 அன்று கார்த்திகை மாத சுப முகூர்த்தநாளில் ஆவணங்கள் அதிக அளவில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் சிறப்பு நிகழ்வாக பொதுமக்கள் பயன் பெறும் வகையில் முன்பதிவு வில்லைகள் 100 லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது.

அதன்படி பொதுமக்கள் உயர்த்தப்பட்ட முன் ஆவணப்பதிவு வில்லைகளை பயன்படுத்தி கடந்த 05.12.2024 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.238.15/ கோடி (ரூபாய் இருநூற்று முப்பத்தெட்டு கோடியே பதினைந்து லட்சம்) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை பதிவுத் துறை எட்டியுள்ளது.

இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

### தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ்

# 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் - மருத்துவக் காப்பீட்டு அட்டைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, டிச. 8 -

**தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும்உன்னதத் திட்டத்தின் கீழ் 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் கடனுதவிக்கான ஆணைகள், தூய்மைப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற விழாவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவு நீர் அகற்றும் வாகனங்களை வழங்கினார். மேலும், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 128 பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணைகளையும், 100 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகளையும், 30 நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

### தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்குதல்

சென்னை குடிநீர் வாரியத்தால் பழைய பகுதிகளில் 2494 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மற்றும் விரிவாக்கப் பட்ட பகுதிகளில் 1659 கிலோ மீட்டர் நீளத்திற்கும் கழிவுநீர் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பழைய சென்னை பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் கட்டமைப்பில் 50 விழுக்காடு மேற்பட்டவை, 40 முதல் 50 வருடங்கள் பழமையானது. இந்த கழிவுநீர் கட்டமைப்புகள் சென்னை குடிநீர் வாரியத்தால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளில், மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை மாற்றி சென்னை பெருநகரில் உள்ள கழிவு நீர் அகற்றும் கட்டமைப்புகளின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை சென்னை குடிநீர் வாரியம் தொடர்ந்து இயந்திரமயமாக்கியுள்ளது. இதனடிப்படையில், கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 539 இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், புதியதாக 58 கழிவுநீர் பராமரிப்பு இயந்திரங்களை 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.08.2024 அன்று சென்னை குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டது.

இவ்வியந்திரங்களை இயக்குவதற்கும், கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிப்பதற்கும் 728 நிரந்தர மற்றும் 1489 ஒப்பந்த பணியாளர்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியாளர்கள் பல ஆண்டு காலமாக கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிக்கும் பணியில் ஈடுப்பட்டு வருகிறார்கள். மேலும், இவர்களின் வாரிசுதாரர்களும் இதே பணியில் ஈடுப்பட்டுள்ளனர். இந்நிலையை மாற்றுவதற்கும் இவர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவதற்கும் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை குடிநீர் வாரியம், தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க அமைப்புடன் (DICCI) இணைந்து இவர்களை தொழில் முனைவோர்களாக மாற்ற உன்னதத் திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 28.02.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதை தொடர்ந்து, சென்னை குடிநீர் வாரியம், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களான 39 நபர்கள், 48 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 126 வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு முன்னுரிமை கொடுத்து, மொத்தம் 213 நபர்களுக்கு நவீன இயந்திரங்கள் வழங்கி இவர்களை தொழில் முனைவோர்களாக மேம்படுத்த 27.12.2023 அன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டது.

இவ்வகையான நவீன கழிவுநீரகற்று இயந்திரங்கள் பெறுவதற்காக அண்ணல் அம்பேத்கர் முன்னோடி கள் திட்டத்தின் கீழ் சிறப்பு நிகழ்வாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கி, மொத்தம் 213 நபர்களுக்கு கடன் உதவி மற்றும் மானியம், முதலமைச்சர் அவர்களால் 8.3.2024 அன்று வழங்கப்பட்டது.

சென்னை குடிநீர் வாரியத்தில் இத்திட்டத்தின் வாயிலாக பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச வருமானமாக தலா 50 ஆயிரம் ரூபாய் என 7 ஆண்டுகளுக்கு உறுதிசெய்யப்படும். இப்பணிகளுக்காக 500 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிர்ணயித்துள்ளது. இதன் மூலம் இந்த குடும்பத்தினருக்கு நிரந்தர வருமானம் உறுதி செய்யப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரத்தையும், சமுதாய கௌரவத்தையும் மேம்படுத்த இந்த சிறப்பு திட்டம் வழிவகுத்துள்ளது.

இப்பணியில் ஈடுபடவுள்ள பணியாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் முறையான பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கடன் திட்டம் போன்றவை தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பதினருக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை வழங்கிடும் முதற்கட்டமாக 100 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கி, அவ்வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

### அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில் கடனுதவிகள் வழங்குதல்

சமூக நீதி மற்றும் சமத்துவ வளர்ச்சிக்கான முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாடு, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத் திற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் **“அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்”** 2023ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் ஓர் உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்திற்கான தொழில் முதலீட்டில் 35 சதவீதத் தொகையை மானியமாகவும் 65 சதவீதத் தொகைக்குரிய வங்கிக் கடன் வட்டியில் 6 சதவீதத் தொகையை வட்டி மானியமாகவும் அளிக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் 128 பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

### தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் வழங்குதல்

தூய்மைப் பணியாளர்கள் இலவசமாக மருத்துவ சிகிச்சை பெறும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 100 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகளை வழங்கிடும் அடையாளமாக 5 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் காப்பீட்டு அட்டைகளை வழங்கினார்.

### நரிக்குறவர்களுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்குதல்

திருவான்மியூரில் தற்காலிக வீட்டில் வசித்து வரும் தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களாக உள்ள நரிக்குறவர்கள் 30 நபர்களுக்கு முழு மானியத்துடன் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 5 நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, கு.செல்வப்பெருந்தகை, இ. பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார். தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். தா.கார்த்தி கேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன். தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க நிறுவனர் / தலைவர் முனைவர் மிலிந்த் காம்ப்ளே, தேசிய தலைவர் ரவிக்குமார் நர்ரா, தென் இந்திய தலைவர் சௌந்தர் ராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸை அவரது அழைப்பின் பேரில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவரும், திருச்சி கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இனிகோ இருதயராஜ் வாடிகனில் சந்தித்து உரையாடினார் அப்போது போப் அவருக்கு ஆசி வழங்கினார். இந்த சந்திப்பின் போது இந்தியாவில் கிறிஸ்தவர்களின் நிலை தமிழகத்தில் சிறுபான்மை கிறிஸ்துவ மக்களுக்கு நிறைவேற்றப்படும் சீர்மிகு திட்டங்கள் குறித்தும், அதனால் அவர்களின் ஏற்றமிகு வாழ்க்கைச் சூழல் குறித்தும் எடுத்துரைத்ததோடு திருத்தந்தை அவர்களை இந்தியாவிற்கு வருமாறு அன்புடன் அழைப்பு விடுத்தார். இந்திய வருகையின் போது, தவறாமல் தமிழகத்திற்கு வரவேண்டும் என்றும், தங்களை வரவேற்பதற்காக தமிழகத்தின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார் என்கின்ற தகவலையும் திருத்தந்தை அவர்களிடம், இனிகோ இருதயராஜ் தெரிவித்தார்.